செ.வெ. எண்:041 நாள்: 18.01.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (18.1.2017) தலைமைச் செயலகத்தில், 2015–2016ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, வனத்துறை ஆகிய துறைகளால் நடத்தப்படும் பள்ளிகளில் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் இடங்களைப் பெற்ற 32 மாணவ மாணவியர்களுக்கு 12 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

தமிழகத்தில் அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கல்வி கற்பதற்கு வறுமை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற உயரிய நோக்கில் கட்டணமில்லா கல்வி, பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

பள்ளிக்கல்வித் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, வனத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய ஆறு துறைகளால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்று 2015–16 ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு மாநில அளவில் 32 மாணவ, மாணவியர் முதலிடத்தையும், 92 மாணவ மாணவியர் இரண்டாம் இடத்தையும், 456 மாணவ மாணவியர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஆண்டுதோறும் 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கொண்டு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்களுக்கு ரொக்கப்

பரிசுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி அவர்களின் மேற்படிப்புகளுக்கான செலவினையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும் திட்டத்தினையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழ்நாடு அரசு, 2015–2016ம் கல்வியாண்டில், 10–ஆம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கொண்டு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் 2 மாணவியர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள், மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 3 மாணவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவிக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை; சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர்கள் இல்லங்களில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; வனத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்;

என ஆக மொத்தம் 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 13 மாணவ, மாணவியர்களுக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் வழங்கினார்.

2015–2016ம் கல்வியாண்டில், 12–ஆம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கொண்டு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு

மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 4 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் 2 மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள், மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 3 மாணவியர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவிக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை; சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர்கள் இல்லங்களில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; வனத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்களுக்குள் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்;

என ஆக மொத்தம் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடத்தைப் பெற்ற 19 மாணவ, மாணவியர்களுக்கு 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று வழங்கினார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், “கடந்த ஆண்டு 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதலிடத்தில் தேர்ச்சிப் பெற்று இன்று பரிசுகள் பெற்றுள்ள மாணவ, மாணவியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, நீங்கள் தொடர்ந்து சிறப்பாக படித்து நமது மாநிலத்திற்கு பெருமை

சேர்க்க வேண்டும். மேலும், உங்கள் கல்வியில் மேன்மேலும் வளர்ச்சியுற்று நீங்கள் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன்” என்று வாழ்த்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களிடமிருந்து காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட மாணவ மாணவியர்கள் தங்களை பாராட்டி காசோலைகள் வழங்கி ஊக்குவித்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி.ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.(ஓய்வு), பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. த. சபிதா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்:– 18.1.2017